ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ரு’தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ அருள் பெறுவார் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ அருள் பெறுவார் ॥

தமக்குப் பேறு அளிக்கச் சமயம் பார்த்திருந்த பேரருளைப் பாராட்டி ஆழ்வார் நெஞ்சுடன் கூறுதல்

‡அருள் பெறுவார் அடியார் தம்⋆ அடியனேற்கு⋆ ஆழியான்
அருள் தருவான் அமைகின்றான்⋆ அது நமது விதிவகையே⋆
இருள் தருமா ஞாலத்துள்⋆ இனிப் பிறவி யான் வேண்டேன்⋆
மருள் ஒழி நீ மட நெஞ்சே!⋆ வாட்டாற்றான் அடி வணங்கே (1)

வாட்டாற்றான் அடி வணங்கி⋆ மா ஞாலப் பிறப்பறுப்பான்⋆
கேட்டாயே மட நெஞ்சே!⋆ கேசவன் எம் பெருமானைப்⋆
பாட்டாய பல பாடிப்⋆ பழவினைகள் பற்றறுத்து⋆
நாட்டாரோடியல்வொழிந்து⋆ நாரணனை நண்ணினமே (2)

நண்ணினம் நாராயணனை⋆ நாமங்கள் பல சொல்லி⋆
மண்ணுலகில் வளம் மிக்க⋆ வாட்டாற்றான் வந்தின்று⋆
விண்ணுலகம் தருவானாய்⋆ விரைகின்றான் விதிவகையே⋆
எண்ணின வாறாகா⋆ இக்கருமங்கள் என் நெஞ்சே! (3)

என் நெஞ்சத்துள் இருந்து⋆ இங்கிரும் தமிழ் நூல் இவை மொழிந்து⋆
வன்னெஞ்சத் திரணியனை⋆ மார்விடந்த வாட்டாற்றான்⋆
மன்னஞ்சப் பாரதத்துப்⋆ பாண்டவர்க்காப் படை தொட்டான்⋆
நல் நெஞ்சே! நம் பெருமான்⋆ நமக்கருள் தான் செய்வானே (4)

வான் ஏற வழி தந்த⋆ வாட்டாற்றான் பணிவகையே⋆
நான் ஏறப் பெறுகின்றேன்⋆ நரகத்தை நகு நெஞ்சே⋆
தேனேறு மலர்த் துளவம்⋆ திகழ் பாதன்⋆ செழும் பறவை
தான் ஏறித் திரிவான் தன்⋆ தாள் இணை என் தலைமேலே (5)

தலைமேல தாள் இணைகள்⋆ தாமரைக்கண் என் அம்மான்⋆
நிலை பேரான் என் நெஞ்சத்து⋆ எப்பொழுதும் எம்பெருமான்⋆

மலை மாடத்தரவணைமேல்⋆ வாட்டாற்றான்⋆ மத மிக்க
கொலை யானை மருப்பொசித்தான்⋆ குரை கழல்கள் குறுகினமே (6)

குரை கழல்கள் குறுகினம்⋆ நம் கோவிந்தன் குடி கொண்டான்⋆
திரை குழுவு கடல் புடை சூழ்⋆ தென் நாட்டுத் திலதம் அன்ன⋆
வரை குழுவு மணி மாட⋆ வாட்டாற்றான் மலர் அடிமேல்⋆
விரை குழுவு நறும் துளவம்⋆ மெய்ந்நின்று கமழுமே (7)

மெய்ந்நின்று கமழ் துளவ⋆ விரையேறு திருமுடியன்⋆
கைந்நின்ற சக்கரத்தன்⋆ கருதும் இடம் பொருது புனல்⋆
மைந்நின்ற வரை போலும்⋆ திருவுருவ வாட்டாற்றாற்கு⋆
எந்நன்றி செய்தேனா⋆ என் நெஞ்சில் திகழ்வதுவே (8)

திகழ்கின்ற திருமார்பில்⋆ திருமங்கை தன்னோடும்⋆
திகழ்கின்ற திருமாலார்⋆ சேர்விடம் தண் வாட்டாறு⋆
புகழ்நின்ற புள்ளூர்தி⋆ போர் அரக்கர் குலம் கெடுத்தான்⋆
இகழ்வின்றி என் நெஞ்சத்து⋆ எப்பொழுதும் பிரியானே (9)

பிரியாதாட் செய்யென்று⋆ பிறப்பறுத்தாள் அறக் கொண்டான்⋆
அரியாகி இரணியனை⋆ ஆகம் கீண்டான் அன்று⋆
பெரியார்க்காட் பட்டக்கால்⋆ பெறாத பயன் பெறுமாறு⋆
வரி வாள் வாய் அரவணைமேல்⋆ வாட்டாற்றான் காட்டினனே (10)

‡காட்டித் தன் கனை கழல்கள்⋆ கடு நரகம் புகல் ஒழித்த⋆
வாட்டாற்றெம் பெருமானை⋆ வளங்குருகூர்ச் சடகோபன்⋆
பாட்டாய தமிழ் மாலை⋆ ஆயிரத்துள் இப்பத்தும்
கேட்டு⋆ ஆரார் வானவர்கள்⋆ செவிக்கினிய செஞ்சொல்லே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com